24

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## GEO 302 – தென்னாசியாவும் தூரகிழக்காசியாவும்

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

**தென்னாசிய, இலங்கைப் புற உருவப் படங்கள் வழங்கப்படும்.**
**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**
**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

1. "தென்னாசியாவின் பிரதேசரீதியான மழைவீழ்ச்சி வேறுபாடுகளில் இப் பிராந்தியத்தின் அமைவிடம், மற்றும் தரைத்தோற்ற அம்சங்களே அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன." இக் கூற்றின் உண்மைத் தன்மையை தென்னாசியாவின் யாதாயினும் ஒரு நாட்டை உதாரணமாகக் கொண்டு விளக்கப் படங்களின் துணையுடன் விளக்குக.

2. தென்னாசியாவின் பிரதான நிலத்தோற்ற அம்சங்களை கூறி, அவற்றுள் ஏதாவது ஒன்றின் பொருளாதார முக்கியத்துவத்தினை விளக்குக.

3. பருவப் பெயர்ச்சிக் காற்றின் தோற்றம், வளர்ச்சி, பின்னடைவு என்பவற்றை தென்னாசியப் புற உருவப் படத்தில் வரைந்து காட்டி, தென்னாசிய கால நிலையில் இக் காற்றுக்களின் செல்வாக்குப் பற்றி சுருக்கமாக விளக்குக.

4. இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கூறி, அண்மைக்காலமாக இலங்கையின் காலநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பான உமது கருத்தினை ஆதாரங்கள் தந்து விளக்குக.

5. நிலச் சீர்திருத்தம் என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? இலங்கையின் விவசாய நடவடிக்கையில் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஏற்படுத்திய தாக்கங்களை பரிசீலனை செய்க.

6. இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சிக்குரிய காரணங்களை கூறி, இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட 5 ஆண்டு திட்டங்களால் இத்துறை அடைந்த நன்மைகளை நுணுகி ஆராய்க: